கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 ஆண்டுகள் 22.02.2001 22.02.2011

Online Newspaper in Tamil Vol.10 30.09.2012

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (67)

### 67. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தைக் கண்டு அஞ்சிய புலிகளும், இதர தமிழ் தேசிய வெறியர்களும்!



செல்வகுமாரன்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1990களின் முற்கூறில் இருந்த நிலைமை பற்றி காந்தி அடிக்கடி விசாரிப்பதற்கு ஒரு காரணம் இருந்தது. நான் அப்பல்கலைக்கழகத்துக்கு முன்னால் ஒரு புத்தகக் கடையை நடாத்தி வந்ததினால் மட்டும், அவன் அங்குள்ள சூழ்நிலைகள் பற்றி விசாரிக்கவில்லை. அல்லது அநேகமாக எல்லா தமிழ் ஆயுதப் போராட்ட இயக்கங்களும் அங்கு தமது செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்பட்டு வந்ததினாலும் கூட அவன் அதில் அக்கறை செலுத்தவில்லை.

தமிழ் காங்கிரஸ் கட்சியும் தமிழரசுக் கட்சியும் தமிழ் மக்களுக்கு இந்துப் பல்கலைக்கழகம் வேண்டும் என்றும், தமிழ் பல்கலைக்கழகம் வேண்டும் என்றும், எதிரும் புதிருமாக கழைக்கூத்தாடிய நேரத்தில், இடதுசாரிகளின் அயராத முயற்சியினால், சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் 1970இல் அமைந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைக் கொண்டு வந்தது. அதன் காரணமாக யாழ்.பல்கலைக்கழகத்தின் மீது தமிழ் தேசிய வெறியர்களுக்கு ஒருவித வெறுப்புணர்ச்சி இருந்து வந்தது. அது முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவத்தில் ஒருமுறை பல்கலைக்கழக மாணவர்களுக்கு எதிரான வன்முறையாக வெளிப்பட்டிருந்தது. (அவர்கள் வெளியிலிருந்த காடையர்களை உசார் படுத்தி, குழப்பம் விளைவித்து, பல்கலைக்கழகத்தை சில வாரங்கள் மூட வைத்தனர்)

பல்கலைக்கழகம் இடதுசாரிகளின் முயற்சியால் உருவாக்கப்பட்டது ஒருபக்கம் இருக்க, அதைத் திறந்து வைக்க அன்றைய பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்க வந்த போது, அதற்கெதிராக தமிழர் கூட்டணி இரண்டு நாள் ஹர்த்தால் நடாத்தி, (அது முழுத் தோல்வியில் முடிந்த போதும்) ஒரு வரலாற்றுத் தவறையும் இழைத்தனர். தமக்குத் தாமே கரி பூசிய அந்த நிகழ்வும் அவர்கள் மனதில் அவமானத் தீயை எரிய விட்டுக்கொண்டே இருந்தது.

அதுமாத்திரமின்றி அப்பல்கலைக்கழகத்தின் முதலாவது தலைவராக மார்க்சியரான பேராசிரியர் க.கைலாசபதி நியமிக்கப்பட்டதும், அவரது முயற்சியால் ஒரு பெரும் இடதுசாரி விரிவுரையாளர்கள் அணி முதல் தொகுதி விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றதும் தமிழ் தேசிய வெறியர்களுக்கு அலர்ஜியான விடயங்களாக இருந்தன.

அதன் காரணமாக, யாழ்.பல்கலைக்கழகச் சூழலில் இடதுசாரிக் கருத்துகள் பலம் பெறத் தொடங்கியிருந்தன. அதன் தாக்கம், 1976இல் வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி 'தமிழீழ' தீர்மானத்தை எடுத்த போது, அதுபற்றி யாழ்.பல்கலைக்கழகத்தில் யாரும் பெரிதாக எதுவும் அலட்டிக் கொள்ளாததில் தெரிந்தது.

தமிழீழத் தீர்மானத்தின் காரணமாக அப்பாவித் தமிழ் மக்களை ஏமாற்றி, தமிழர் கூட்டணி 1977 தேர்தலில் வடக்கு கிழக்கில் 18 ஆசனங்களைக் கைப்பற்றி எதிர்க்கட்சியாக வந்த பின்னர், அந்தப் பதவிக்குரிய பாத்திரத்தை வகிக்காது, தமது வர்க்க சகாவான ஜே.ஆர்.ஜெயவர்த்தன அரசுடன் கூடிக்குலவி ஊடல் செய்த போது, அதற்கெதிரான இயக்கத்தை ஆரம்பித்து வைத்தவர்களும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகத்தினர் தான்.

பின்னர் ஜே.ஆர்.அரசு தமிழ்மக்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, பின்னர் அதை தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தமாக மாற்றிய போது, அதற்கெதிரான முதல் அடியை எடுத்து வைத்தவர்களும் இந்த பல்கலைக்கழக சமூகத்தினர் தான். அமைதிப்படையாக வந்த இந்திய இராணுவத்தினரை யுத்தத்தில் புலிகள் இழுத்துவிட்ட போது, புலிகளை வேட்டையாட வேண்டிய இந்தியப் படை, புல்லுடன் நெல்லையும் களைவது போல, புலிகளை மட்டுமின்றி அப்பாவிப் பொதுமக்களையும் வேட்டையாடிய போது, அதையும் எதிர்த்து நின்றது பல்கலைக்கழக சமூகம்.

விடுதலை வேடத்தில் வந்த புலிகள் தமது வேடம் களைந்து, தமிழ் மக்களின் புதிய அடக்குமுறையாளர்களாக மாறிய போது, புலிகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கவும் யாழ்.பல்கலைக்கழக சமூகம் தயங்கவில்லை. அந்தப் போராட்டத்தில் புலிகளின் கொலை வெறிக்கு ஆளானவர்கள்தான், விரிவுரையாளர் ராஜினி திராணகம, மாணவ மணிகள் விஜிதரன், செல்வகுமாரன் (ரமணி), விமலேந்தின், செல்வி. தில்லைநாதன், மனோகரன் எனப் பலப்பலர். இலங்கை இராணுவமோ, இந்திய இராணுவமோ இவ்வாறு எவரையும் கொல்லவில்லை. தமிழ் மக்களின் 'மீட்பர்களான' புலிகள் மட்டும் தமது சொந்தச் சகோதரர்களையே வேட்டையாடினர்.
எனவே, புலிகள் உட்பட தமிழ் தேசிய வெறியர்கள் அத்தனை பேரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகம் மீது வெறுப்பும் துவேசமும் சந்தேகமும் கொண்டே செயற்பட்டு வந்தனர். புலிகளுக்கு எதிராக பல்கலைக்கழகத்தில் உருவான உணர்வலைகளுக்கான பங்கில் எனக்கும் ஒர் அணில் அளவு சிறு பங்கு உண்டு என்பது உண்மையே என்ற போதிலும், அதையும் கூட புலிகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. அதுவும் ஒரு காரணம், நான் இப்பொழுது புலிகளது 'விருந்தாளி'யாக இருப்பது.

'கறையான் புற்றெடுக்க, பாம்பு குடி கொண்ட கதையாக' பிற்காலத்தில் திருநாவுக்கரசு, சிதம்பரநாதன், கஜேந்திரன் (குதிரை) போன்ற புலிகளின் அடிவருடிகள் பல்கலைக்கழகத்தைச் சீரழித்து, மாணவர்களின் படிப்புக்கும், பல்கலைக்கழகத்தின் பெறுமானத்துக்கும் ஆப்பு வைத்து, அதை புலிகளின் ஒரு கூடாரமாக மாற்றும் வரை, சுமார் 20 ஆண்டுகள் யாழ்.பல்கலைக்கழகம் தனது முற்போக்கு புலமைசார் ஆளுமையை நிலைநாட்டியே வந்துள்ளது.

தங்களின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணக் குடா நாட்டைப் புலிகள் கொண்டு வந்த பின்னரும் கூட, புலிகள் யாழ்.பல்கலைக்கழக சூழல் பற்றி அதிகம் கவலைப்பட்டதற்கு இதுதான் காரணம். அதன் காரணமாகத்தான் முன்னர் தமக்கு எதிரானவர்களாகக் கருதப்பட்ட விரிவுரையாளர்கள் சித்திரலேகா, மௌனகுரு, நுஃமான், ஏ.ஜே.கனகரத்னா, ஜெயசீலன் அடிகளார் போன்றவர்கள் (இதில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் பற்றி நான் குறிப்பிடவில்லை - அவர்கள் புலிகளின் முதலாம் நம்பர் எதிரிகள் என்பது எல்லோரும் அறிந்ததே) பற்றியும், மாணவர்களாக இருந்த தில்லை, செல்வி, மனோகரன், சேரன், வ.ஐ.ச.ஜெயபாலன், சிவரஞ்சித் போன்றவர்கள் பற்றியும் (இதில் நேரடியாக இயக்கங்களில் செயற்பட்ட சில மாணவர்களின் பெயர்களை நான் குறிப்பிடவில்லை) அடிக்கடி காந்தி என்னிடம் விசரித்தான்.

ஒரு சந்தர்ப்பத்தில் அவன் என்னை விசாரிக்கும் போது, ஏ.ஜே.கனகரத்தினா இப்பொழுது புலிகள் இயக்கத்துக்கு ஆதரவாக மாறியுள்ளார் எனத் தெரியவந்ததாகவும், அது உண்மையான விசுவாசமா அல்லது தம்மீதான பயத்தின் காரணமாகவா என என்னிடம் வினவினான்.



Yarl TV Live

புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

BBC
Newsnow

நான் அதுபற்றி எனக்குத் தெரியாது எனப் பதிலளித்தேன். ஏ.ஜே. கனகரத்தினா இந்தப் பாசிசவாதிகளை ஒருபோதும் ஆதரிக்கமாட்டார் என்பது எனக்குத் தெரியும். எனது நீண்டகால நண்பரான அவரது எண்ணவோட்டங்களை, அவருடனான பல உரையாடல்களின் போது நான் அவதானித்திருக்கிறேன். அவர் தனது வேலையைக்கூட தனது கருத்துச் சுதந்திரத்துக்காக தூக்கி எறிந்தவர். யாருக்கும் சலுகைகளுக்காக அடி பணிபவர் அல்ல அவர். ஆனால் எவ்வளவோ நெருக்கடிகள் வந்த போதும், யாழ்ப்பாணத்தில்தான, தான்; வாழ்வது என்ற தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவர். இறுதிக் காலத்தில் கடும் நோய்வாய்ப்பட்டு, கொழும்பில் சிகிச்சை பெற வேண்டிய சூழலில் அங்கு சென்று மரணமானார்.

புலிகள் ஆதிக்கத்தில் இருந்த காலத்தில், லண்டன் பி.பி.சி தமிழோசை ஒருமுறை ஏ.ஜே. கனகரத்தினாவிடம் யாழ்ப்பாண நிலைமைகள் பற்றி ஒரு வினாவைத் தொடுத்த போது, 'அதைப்பற்றிக் கதைச்சால் கரைச்சல்' என ஒரு வாக்கியத்தில் புலிகளின் கீழான தமிழ் மக்களின் நிலைமை பற்றி வெகு கச்சிதமாக எடுத்தியம்பியவர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகம் பற்றி காந்தி என்னிடம் புதிதாகத் தொடுத்த கேள்விகளுக்கு காரணமாக, ஏதோ புதிய 'கோள் மூட்டல்கள்' வெளியிலிருந்து நடந்திருக்கிறது என்பது மட்டும் புரிந்தது. அதை யார் செய்திருப்பார்கள் என்பதும் விளங்கியது. செல்வி, தில்லை, மனோகரன் மற்றும் என்னைப் போன்றவர்கள் என்ன காரணம் கொண்டும் உயிருடன் வெளியே வந்துவிடக்கூடாது என்பதில் அக்கறையுள்ள சிலர், தொடர்ந்து புலிகளின் புலனாய்வுப் பிரிவினர்களுக்கு இம்மாதிரியான தகவல்களை வழங்கிக் கொண்டிருப்பதன் விளைவே இது.

காந்தி அத்துடன் அன்றைய தினம் எனது விசாரணையை முடித்துக்கொண்டு என்னைப் போக அனுமதித்தான். ஆனால் இந்த விவகாரம் இத்துடன் முடிந்துவிடப் போவதில்லை என்பது எனக்குத் தெரியும்.

நான் வதை முகாமுக்குள் சென்றவுடன் வழமை போல எனது சக வதை முகாம் கைதிகள் என்னைத் தலையிலிருந்த கால் வரை ஒருமுறை ஆராய்ந்துவிட்டு அமைதியடைந்தனர். இது ஒரு வழமையான நடைமுறை. வெளியில் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுபவர்கள், திரும்பி வரும் போது என்ன கோலத்தில் (என்னென்ன அவயங்கள் உடைபட்டு அல்லது முறிபட்டு) வருகிறார்கள் என்பதை அவதானிப்பது, உள்ளே இருந்த ஏனைய கைதிகளின் ஒரு வழமையாக இருந்தது.

நான் உள்ளே வந்த சிறிது நேரத்தில் சிறை வாசலில் தலை மொட்டை அடித்த, ஒரு கை இல்லாத ஒருவனும், இன்னொரு புதியவனும் வந்து நின்று வதை முகாமுக்குள் உள்ளவர்களை நோட்டமிடத் தொடங்கினர். இதை அவதானித்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த குமார் என்ற கைதி, என்னைப் பார்த்து தலையைத் தடவிக்கொண்டு, தனது நெஞ்சில் தனது சுட்டு விரலை வைத்து தட்டினான். இந்தப் பரிபாசை என்னவென்றால், இவர்கள்தான் கைதிகளுக்கு மண்டையில் போடுபவர்கள் என்பதாகும்.

இந்தக் குமார் முன்னர் ஜெகனின் 'ரெலி' என்ற இயக்கத்தில் தீவிர உறுப்பினராக இருந்தவன். துணிகரமானவன். ஜெகனை புலிகள் கதைப்பதற்கு என்று கூப்பிட்டு. கல்லுண்டாய் வெளியில் வைத்துச் சுட்டுப் படுகொலை செய்த பின்னர், புலிகள் மீது தீவிர வெறுப்பில் இருந்தான். புலிகளின் 'காவல்துறை' உறுப்பினன் ஒருவனை ஆனைக்கோட்டையில் வைத்து நன்றாகப் புடைத்துவிட்டு, மதகுக்குள் தூக்கிப் போட்டதற்காக குமார் கைது செய்யப்பட்டு, புலிகளால் நன்றாகப் 'பதம் பார்க்கப்பட்ட' பின்னர் வதை முகாமுக்குள் அடைக்கப்பட்டிருந்தான். ஆனாலும் அடிபட்ட பாம்பு போலச் சீறிக்கொண்டுதான் இருந்தான்.

வதை முகாம்  வாசலில் வந்து நின்றவர்களில் ஒருவனைப் பார்த்து சௌந்தராஜன் என்ற வவுனியாவைச் சேர்ந்த கைதியும் கலங்கியதை அவதானிக்க முடிந்தது. சௌந்தராஜன் மெதுவாக என்னருகே வந்து அவர்களில் ஒருவனின் பெயர் திசை என்றும், அவன்தான், புலிகளின் கிளிநொச்சி வதை முகாமுக்குப் பொறுப்பானவன் என்றும், தான் கிளிநொச்சி வதை முகாமுக்குள்; அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது, அவன் கைதிகளுக்குச் செய்த கொடுமைகள் விவரிக்க இயலாதது என்றும் பயத்துடன் சொன்னான்.

தொடரும்ஸ

முன்னைய பதிவுகள்